செய்தி வெளியீட்டு எண்.784 நாள்: 2.11.2009

## தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகள் பிரச்சினை குறித்த சிறப்பு ஆலோசனைக்கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள்

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நேற்றையதினம் விடுத்த அறிக்கைக்கு இணங்க, இன்று 2.11.2009 காலையில் முதலமைச்சர் தலைமையில் தலைமைச்செயலகத்தில் தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகள் பிரச்சினை குறித்த சிறப்பு ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன், மாண்புமிகு துணைமுதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின், மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு.ஆர்க்காடு நா.வீராசாமி, மாண்புமிகு உயர்கல்வி மற்றும் கனிமவளத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு.ஐ.பெரியசாமி, மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு.எ.வ. வேலு, மாண்புமிகு குடிசை மாற்றுத்துறை அமைச்சர் திரு.சுப.தங்கவேலன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு, மாண்புமிகு சமூகநலத்துறைஅமைச்சர் திருமதி.கீதா ஜீவன், தலைமைச் செயலாளர் திரு.கே.எஸ்.ஸ்ரீபதி, நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு.கு.ஞானதேசிகன், பொது மற்றும் உள்துறை (கூடுதல் பொறுப்பு) செயலாளர் திரு.ஜோதி ஜெகராஜன், மறுவாழ்வுத்துறை இயக்குநர் திரு.எம்.முத்தையா கலைவாணன், காவல்துறை தலைவர் (நுண்ணறிவு) திரு.ஜாபர்சேட் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இலங்கைத் தமிழ் அகதிகள் மிகுந்த அவதியுறுவதாக வந்த செய்தி குறித்து விவரங்களைக் கோரினார். அவர்களும் தமிழர்கள் என்பதை மறவாமலும் – அவர்களை அகதிகள் என்ற நோக்கத்தோடு பார்க்கக் கூடாது என்றும் கூறி, இந்தப் பிரச்சினைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து அவர்களின் அல்லல்களுக்கு உடனடி தீர்வு காண வேண்டுமென்று வலியுறுத்தினார். இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு கழக அரசு காலத்தில் செய்யப்பட்ட பல்வேறு சலுகைகளை பற்றிய விவரங்களைக் கேட்ட பின்னர், தொடர்ந்து அவர்களுக்கு எந்தவிதத்தில் உதவி அளிக்க வேண்டும் என்பதைப் பற்றி அறிந்திட தமிழகத்திலே உள்ள 115 முகாம்களுக்கும் உடனடியாக அமைச்சர்கள் சென்று நேரிலே நிலைமைகளை அறிந்து, நவம்பர் திங்கள் 10ஆம் தேதிக்குள் முதல் அமைச்சருக்கு அறிக்கையினை அளிக்க வேண்டுமென்றும், அந்தப் பரிந்துரைகளின் அடிப்படையில் அவர்களுக்குத் தேவையான உதவிகள் அளிக்கப்பட வேண்டுமென்றும் இந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

2006ஆம் ஆண்டு தி.மு.கழக அரசு ஐந்தாவது முறையாகப் பதவியேற்ற பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அமைச்சர்களை யெல்லாம் இது போல முகாம்களைப் பார்வையிட அறிவுறுத்தியதின் பேரில் அவர்களும் அவ்வாறு சென்று அளித்த அறிக்கையினை யொட்டி, முகாம்களில் உள்ள வீடுகளுக்கு மறு சீரமைப்பு செய்திடவும், அடிப்படை வசதிகளைச் செய்து தரவும் சுமார் 16 கோடி ரூபாய்க் கான முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டு, அது மத்திய அரசிற்கு அனுப்பி வைக்கப் பட்டு பரிசீலனையிலே உள்ளது.

மத்திய அரசிடமிருந்து அதற்கு ஒப்புதல் இன்னமும் வராத நிலையில் 2009–2010ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் தமிழக அரசின் சார்பில் ஐந்து கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போது அமைச்சர்கள் முகாம்களைப்

பார்வையிட்டு நவம்பர் 10ஆம் தேதிக்குள் அறிக்கை அளித்த பின், அதன் அடிப் படையில் மேலும் இந்த முகாம்களில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு உதவிடும் வகையில் அடிப்படை வசதிகள் மேம்பாட்டிற்காக 12 கோடி ரூபாய் தமிழக அரசின் சார்பில் உடனடியாகச் செலவிடுவது என்றும், அந்தத் தொகையை எவ்வாறு செலவழிப்பது என்பது பற்றி நவம்பர் 10ஆம் தேதிக்குப் பிறகு அமைச்சர்களின் அறிக்கையின் அடிப்படையில் மேல் நடவடிக்கைகளை எடுப்பது என்றும் இன்றைய கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

* * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.